ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸ்ரீராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# ॥ த்வயம் திவ்யம் ॥

(உகத்தின் சுகம்)

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ த்வயம் திவ்யம் ॥

(உகத்தின் சுகம்)

## தோற்றம்

ஓதுமிரண்டை இணைத்து⋆ தன்
பாதம் இரண்டால் அணைத்து⋆
போதுமென மீட்டிக் கடலில்⋆
வாழுமென அருளினான் தம்சேவைக்கே (1)

## காரணம்

ஆறும் பேறும் வேறின்றி⋆ அவ்-
வடியவர் அனைவரும் தமரின்றி⋆
விண்ணும் மண்ணும் பணிசெய்ய⋆
பன்னும் இவ்விரண்டும் திண்ணமே (2)

## சிறப்பு

திருவும் அடிகளும் திறம்பட⋆
எட்டும் தட்டும் விட நவின்றிட⋆
அரங்கன் ஏவ தரத்துடன் இயம்ப⋆
வள்ளல் வழியில் விண்ணப்பம் இன்றே (3)

## பொருள்

சேர்க்கும் திருமகள் சேர்த்தியின் மன்னுதல்⋆
காக்கும் குணங்கள் கருணையடிகள்⋆
அடையும் புகல் அதிலே பற்றுதல்⋆
இயலா நிலையில் எமக்கீன்ற பேறு⋆
ஏற்கும் எல்லைகள் அறுக்கும் களைகள்⋆
முன்னோர் பத்தும் மறையவர் நிதிகள் (4)

www.prapatti.com

## ஸ்ரீ சப்தார்த்தம்

திருமகள் கேட்டு அவனை கேட்பித்து⋆
தன் அடியாரடைய தான் அடைந்து⋆
குறைநீக்கி நிறையாக்கித் துறையென⋆
பறை நோக்க நம்மிறையின் மறையே (5)

## மத் சப்தார்த்தம்

தன்னிச்சையில் தரித்து ஏவித் தான் முதல்வனாய்⋆
உயர்ந்துறங்கி உலாவியுறைந்து உகப்பாய்⋆
நம்மிழுக்கால் மன்னியுறையும் மாமலராள்⋆
திருவுரத்தில் அவனைத் தினையளவும் அகலாள் (6)

## நாராயண சப்தார்த்தம்

ஆதியாய் உடலில் உயிராய் மாசிலா சோதியாய்⋆
பதியாய் இறையாய் கதியாய் அகலா உறவாய்⋆
அனைத்துக் காரணமாய் காரியமாய் நாம் ஏத்தும்
ஆரணத்தில்⋆ நாரணன் நற்குணங்கள் பூரணமே (7)

## சரணௌ சப்தார்த்தம்

ஒன்றாய் நாலாய் பத்தாய் நின்றாய்⋆
உள்ளாய் என்னுள் யானும் உனதாய்⋆
எந்தாய் எங்கும் என்றும் மன்னியே⋆
தந்தாய் இணையடிகள் எம்மிதயத்திலே (8)

## சரணம் சப்தார்த்தம்

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழும்⋆
தொல்வினை தீர்க்கும் என் இறையே⋆
மன்னித்தருளும் சீமாதவன் மலரடிகள்
மருவ⋆ மற்றொன்றின்றி நிறைவே (9)



www.prapatti.com

ப்ரபத் சப்தார்த்தம்

உறுமதியில் உத்தமனை உகந்தாரும்⋆
மறுகதியின்றி மாவீரனைத் தொழுதாரும்⋆
அரியென சக்கரத்தானை சார்ந்தாரும்⋆
நெறி ஒன்றேயென இன்றே பற்றினரே (10)

யே சப்தார்த்தம்

முயலாத மூன்றில் இனம் மயங்க⋆
இயலாத நிலையுள் மனம் ததும்ப⋆
முத்திக்கு வழி சரண் ஒன்றேயென⋆
தித்திக்கும் முகுந்தன் திண் கழலே (11)

ஸ்ரீமதே நாராயண சப்தார்த்தம்

ஒட்டாது மாசில் உயிராய் தரிக்கும்⋆
தட்டாது கோதில கோவிந்தனளிக்கும்⋆
தகவாது கழிந்த காலமும் தகர்க்கும்⋆ இனி
பிரியாது கேசவன் பணியில் கிடக்கும் (12)

ஆய சப்தார்த்தம்

ஆவேனென அறிந்தாரும்⋆ மாளா
அடிமை என புகுந்தாரும்⋆ ஆவி
அரிமுகனுக்கே தந்திருந்தாரும்⋆
தேடி அடைவதுகத்தின் சுகமே (13)

நம: சப்தார்த்தம்

ஒழிந்தது யான் எனதெனக்கே⋆
மகிழ்ந்தது மனம் அதுவும் உமக்கே (14)

www.prapatti.com

### ப்ரபத்தி முறை

நல்வழி ஏற்று அல்வழி துறந்து⋆
துணிவில் நிலைத்து காவலில் வரித்து⋆
அழியாயுறவில் புகலின்றி தாளில்⋆
தஞ்சம் இறைஞ்சும் எந்தன் நெஞ்சமே (15)

### தமிழாக்கம்

திருமகள் தனியா நாரணன்
இணையடிகள் சரணென பற்றவே⋆
திருமால் சேவை தமக்கின்றி
நல்வாழ்ச்சி பெற்றனரே (16)

### பலன்

பணிந்தே என் உள்ளம் உரை உடலால்⋆
மறைந்தே மறக்கும் பற்பிறவி மறங்கள்⋆
தணிந்தே ஆவியகல மாயனை அத்துன்பம்⋆
விரைந்தே காட்டும் வைகுந்தன் வீட்டின்பம் (17)

www.prapatti.com